## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
## பாராளுமன்றம்

# 1987 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, பாராளுமன்ற (தத்துவங்களும், சிறப்புரிமைகளும்) (திருத்தம்) சட்டம்

*[1987, செப்ரெம்பர் 23 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது**


1987, செப்ரெம்பர் மாதம் 25 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

விலை : சதம் 30

தபால் செலவு : சதம் 75

**1987 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, பாராளுமன்ற (தத்துவங்களும் சிறப்புரிமைகளும்) (திருத்தம்) சட்டம்**

[1987 செப்ரெம்பர் 23 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ—ஒ. 36/87

**பாராளுமன்ற (தத்துவங்களும், சிறப்புரிமைகளும்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது, 1987 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, பாராளுமன்ற (தத்துவங்களும், சிறப்புரிமைகளும்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

2. இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும் பாராளுமன்ற (தத்துவங்களும், சிறப்புரிமைகளும்) சட்டத்தின் 23 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அதன் (ஆ) என்னும் பந்தியில் "ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு", என்னும் சொற்களுக்குப் பதிலாக, "குற்றப்பணமொன்றுக்கு" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. *383 ஆம் அத்தியாயத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

3. ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 5 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான, முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 28 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

"(1) இச்சட்டத்திற்கான அட்டவணையின் பாகம் 'அ' என்பதில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தவறுக்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்படக்கூடிய தண்டனையானது, இரண்டு ஆண்டுகளை விஞ்சாத காலப் பகுதியொன்றுக்கான இருவகையிலொருவகை மறியற்றண்டனை அல்லது குற்றப்பணம், அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டும் ஆதல் வேண்டும்.".

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் இசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*